# கோயம்புத்தூர் மாநகராட்சி

அனுப்புநர்

திரு ஆர். வெங்கடாசலம்,
மேயர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர்- 641 001

பெறுநர்

மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள்,
ஆளும்கட்சி / எதிர் கட்சித் தலைவர்கள்,
வார்டு குழுத் தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
நிலைக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

சட்டமன்ற உறுப்பினர்கள்
(கோவை கிழக்கு, கோவை மேற்கு,
சிங்காநல்லூர், தொண்டாமுத்தூர்
மற்றும் பேரூர் சட்டமன்ற தொகுதிகள்),

பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை மற்றும் பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

ந.க.எண் : 3338/ 2010 / எம்சி. 8 நாள் : 14 .4.2010

அய்யா /அம்மா,

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மாமன்ற அவசரக் கூட்டம் - நிகழ்ச்சி நிரல் அனுப்புவது - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற அவசரக் கூட்டம் வருகின்ற 16.4.2010 வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அது சமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத்தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

இணைப்பு : 2

/ உண்மைநகல் / உத்திரவின்படி/

மாமன்ற செயலாளர்

நகல் :

துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

## மாமன்ற அவசரக் கூட்டம்
## ஏப்ரல் 2010

## நிகழ்ச்சி நிரல்

| பொருளடக்கம் | |
|---|---|
| அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br><br>ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி | |
| **வ.எண்** | **இ). தீர்மானத்திற்குரிய பொருள்** |
| **1** | பொறியியல் பிரிவு - உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு - அவினாசி சாலையிலிருந்து கொடிசியா அரங்கத்திற்குச் செல்லும் திட்டசாலையை 60’ அடி சாலையாக அமைத்தல் - அரசாணை பதிவு செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருவது – தொடர்பாக. |
| **2** | பொறியியல் பிரிவு - உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு - துப்புரவுப் பணிகளை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளுதல் - மாமன்ற ஒப்புதல் கோருவது – தொடர்பாக. |
| **3** | நகரமைப்பு பிரிவு - தமிழ்நாடு அரசு மீன் வளர்ச்சித் துறை - நவீன மீன் விற்பனைக் கூடம் மூன்று இடங்களில் அமைத்தல் -மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **4** | பணியமைப்பு - உடல் ஊனமுற்ற குழந்தைகள் நலச் சங்கத்திற்கு நன்கொடை வழங்குதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| **5** | பொறியியல் பிரிவு - உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு – 8 எண்ணிக்கைகள் நடமாடும் நவீன கழிப்பறைகள் அமைத்தல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் – தொடர்பாக. |
| **6** | பொறியியல் பிரிவு - உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு – 10 எண்ணிக்கைகள் நடமாடும் நவீன கழிப்பறைகள் அமைத்தல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் – தொடர்பாக. |
| **7** | பொறியியல் பிரிவு - உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு – 10 எண்ணிக்கைகள் நடமாடும் நவீன கழிப்பறைகள் அமைத்தல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் – தொடர்பாக. |
| **8** | பொறியியல் பிரிவு - உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு – 12 எண்ணிக்கைகள் நடமாடும் நவீன கழிப்பறைகள் அமைத்தல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் – தொடர்பாக. |
| **9** | பொறியியல் பிரிவு - உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு – 20 எண்ணிக்கைகள் நடமாடும் நவீன கழிப்பறைகள் அமைத்தல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் – தொடர்பாக. |
| **10** | பொறியியல் பிரிவு - உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாடு - கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட சாலைகளில் தனியார் பங்களிப்பு மூலம் சாலை மைய தடுப்பு சுவர் கட்டி அலங்கார பூங்கா அமைத்து மூன்று ஆண்டுகளுக்கு விளம்பர உரிமத்துடன் கொடுத்து அவற்றினை பராமரித்து திரும்ப ஒப்படைத்தல் பணிக்கு விருப்ப கேட்பு அறிக்கை (EOI) கோரப்பட்டது – மாமன்றத்தின் அனுமதி வேண்டுதல் - தொடர்பாக. |
| **11** | கிழக்கு மண்டலம்-2010-2013-ம் ஆண்டுக்கான குத்தகை இனங்களில் ரேஸ்கோர்ஸ் கட்டண கழிப்பிடத்திற்கு “மின் ஏலம்” E-auction மூலம் ஏலம் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் உயர்ந்தபட்ச கேள்விதாரர்களுக்கு ஒப்படைவு செய்தல் - தொடர்பாக. |
| **12** | தெற்கு மண்டலம்- 2010-13 ம் ஆண்டு- தியாகி குமரன் மார்க்கெட் குத்தகை இனம் - மறு ஏலம் கோரியது – மாமன்ற அனுமதி கோருதல்- தொடர்பாக |
| **13** | மேற்கு மண்டலம் - குத்தகை இனங்கள் 2010-13 மூன்றாண்டுகளுக்கு ஒப்படைத்தல் - பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 24.03.2010, பொது மறு மின் ஏலம் மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளி 29.03.2010 மற்றும் 06.04.2010 ஆகிய தேதிகளில் நடைபெற்றது – ஏலக் கேள்வி மற்றும் ஒப்பந்தப்புள்ளி தொகை பெறப்பட்டது தொடர்பாக மன்றத்தின் பின்னேற்புக்கு கோருதல் - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |

நன்றியுரை

அ) திருக்குறள்

**அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழிபயக்கும்**
**ஊதியமுஞ் சூழ்ந்து செயல்.**

**(குறள் 461)**

**விளக்கம்**

**எந்த அளவுக்கு நன்மை கிடைக்கும் அல்லது தீமை ஏற்படும் என்று விளைவுகளைக் கணக்குப் பார்த்த பிறகே ஒரு செயலில் இறங்க வேண்டும்.**

**திருவள்ளுவர்.**

---

**ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி**

**இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.**

## பொருள் எண் 1

பொருள்: உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு - கோவை 2010 - மாநாடு நடைபெறும் கொடிசியா அரங்கிற்கு அவினாசி சாலையிலிருந்து செல்லும் திட்டச் சாலைக்கு அணுகு சாலை அமைக்க நிர்வாக அனுமதியும், நிதி ஒப்பளிப்பும் வழங்கி அரசாணை பிறப்பிக்கப்பட்டது – அரசாணை பதிவு செய்தல் மற்றும் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோர மாமன்ற அனுமதி வேண்டுதல் - தொடர்பாக.

பார்வை : அரசாணை (3டி) எண். 11 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 07-04-2010

------------------------

கோவையில் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு நடைபெறும் பகுதியான கொடிசியா அரங்கத்திற்கு அவினாசி சாலையிலிருந்து செல்லும் திட்டச் சாலையை (அணுகு சாலை) 60 அடி சாலையாக அமைப்பதற்கு நிர்வாக அனுமதியும் நிதி ஒப்பளிப்பும் வழங்கி பார்வையில் கண்டுள்ள அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

எனவே அரசின் நிர்வாக அனுமதியும் நிதி ஒப்பளிப்பும் வழங்கப்பட்டதன் தொடர்ச்சியாக கீழ்கண்டுள்ள பணிகளுக்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) | அலுவலகக் குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 60 அடி திட்டச் சாலை 2 வழிப்பாதையாக (13.50 மீட்டர் அகலம்) அமைத்தல் | 159.00 | நகராட்சி நிர்வாக இயக்குநக-ரத்தின் தலைமைப் பொறியாளரின் தொழில் நுட்ப அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம். |
| 2 | சாலையின் மையத்தில் தெருமின்-விளக்குகள் மற்றும் உயர் மட்ட கோபுர விளக்குகள் அமைத்தல் | 26.00 | ஒப்பந்தப்புள்ளி கோர மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம் |
| | மொத்தம் | 185.00 இலட்சம் | |

எனவே, மேற்கண்ட பணிகளுக்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டியும் இப்பணிகளுக்கு தேவைப்படும் நிலத்தை சம்பந்தப்பட்ட நில உரிமையாளர்களுக்கு உள்ளூர் திட்டக் குழும நிதியை மாவட்ட ஆட்சியர் மூலம் நஷ்ட ஈடாக வழங்கிய பின்னர் அந்நிலங்களை கோவை மாநகராட்சியின் பெயருக்கு கிரயப்பத்திரம் பதிவு செய்யவும், பின்னர் அச்சாலைகளின் தரத்தை உயர்த்த மாமன்றம் ஒப்புதல் வேண்டியும் பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

1. இப்பணிகளுக்கு தேவைப்படும் நிலத்தை சம்பந்தப்பட்ட நில உரிமையாளர்களிடமிருந்து கோவை மாநகராட்சியின் பெயருக்கு கிரயப்பத்திரம் பெற்று தரம் உயர்த்த மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

2. அரசாணை (3டி) எண்.11 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 07-04-2010-ஐ மாமன்றம் பதிவு செய்யலாம்.

3. மேற்குறிப்பிட்ட வரிசை எண்.1-ல் உள்ள பணிகளுக்கு நகராட்சி நிர்வாக இயக்குநரக தலைமைப் பொறியாளரின் தொழில் நுட்ப அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

4. மேற்குறிப்பிட்ட வரிசை எண்.2-ல் குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோர மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண். 3537/ 2010 / எம்.டி.3

### மாநகர மன்ற தீர்மானம் எண்.1 நாள்.16.4.2010

அலுவலகக்குறிப்பு 1,2,3 மற்றும் 4 ஒப்புதல் வழங்கப்பட்டது.

---

**<u>பொருள் எண் :2</u>**

பொருள் : உலகத் தமிழ்ச்செம்மொழி மாநாடு - கோவை மாநகரில் வரும் ஜீன் 2010-ஆம் ஆண்டு நடைபெற உள்ளதனை முன்னிட்டு கோவை மாநகர் மற்றும் மாநாடு நடைபெறும் பகுதியில் துப்புரவுப் பணிகளை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளும் பணி – சம்மந்தமாக

பார்வை :
1. உலகத் தமிழச் செம்மொழி மாநாடு சிறப்பு அலுவலர் கூட்ட நடவடிக்கை நாள்: 14-11-2009 கடித எண்: 3/2009 தேதி: 23-11-2009
2. ஆணையரின் உத்திரவு நாள் : 20-01-2010
3. சுகாதாரக்குழு தீர்மான எண் : 95 நாள் :22-01-2010
4. மாமன்றத் தீர்மான எண் : 219 நாள் :29-01-2010
5. அரசு ஆணை (நிலை) எண்: 30 நாள் :10-02-2010
6. ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக் குழு நாள் : 06-04-2010

*******

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு கோவை மாநகரில் வரும் ஜீன் மாதத்தில் நடைபெற உள்ளதனை முன்னிட்டு கோவை மாநகர் மற்றும் மாநாடு நடைபெறும் பகுதியில் சுகாதாரப் பணிகளை ஒப்பந்த அடிப்படையில் துப்புரவு பணியாளர்களை அமர்த்தி துப்புரவு பணிகளை மேற்கொள்ளும் பணிக்கு ரூ.65,00,000/-க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. மேற்கூறிய பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.65,00,000/-க்கு நிர்வாக அனுமதி வேண்டியும், அதற்கு உண்டாகும் செலவினத்தை அரசு நிதியினை எதிர்நோக்கி மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி பெற சுகாதாரக் குழுவின் பரிந்துரை வேண்டி பொருள் வைக்கப்பட்டு, சுகாதாரக் குழு தனது தீர்மான எண்:95,நாள்:22-01-2010ல் மேற்கூறிய பணியினை மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி பெற பரிந்துரை செய்தது.

மாமன்றம் தனது தீர்மான எண் 219 நாள் 29-01-2010ல் மேற்கூறிய பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது. இந்நிலையில் அரசு ஆணை (நிலை) எண்: 30 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 10-02-2010ல் மேற்படி உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டு வளாகம் அமையும் பகுதிகளில் சுகாதாரப் பணிகளை மேற்கொள்ள தற்காலிகமாக 315 எண்ணிக்கையில் சுகாதார பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் அமர்த்தி பணி மேற்கொள்ள ரூ.35,00,000/- நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து மேற்படி பணிக்கு திருத்திய மதிப்பீடு ரூ.35,00,000/-க்கு தயாரிக்கப்பட்டு கடந்த 05.04.2010ல் முதல் அழைப்பாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ் கண்ட இரு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் பெறப்பட்டன.

1. திரு.R.மயில்வாணன், மதிப்பீட்டிற்கு 0.46% குறைவு
2. தி/எ் K.C.P. இஞ்சினியர்ஸ் & பேப்ரிகேட்டர்ஸ், மதிப்பீட்டிற்கு 0.08% குறைவு

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை கடந்த 06.04.2010 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக் குழு கூட்டத்தில் திறனாய்வு செய்யப்பட்டு மதிப்பீட்டிற்கு 0.46% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.R.மயில்வாணன் ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப் புள்ளியினை மாமன்றத்தின் அனுமதியுடன் ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

எனவே உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டு வளாகம் அமையும் பகுதிகளில் சுகாதாரப் பணிகளை மேற்கொள்ள தற்காலிகமாக 315 எண்ணிக்கையில் சுகாதார பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்கொள்ள மதீப்பீட்டிற்கு 0.46% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.R.மயில்வாணன் எனும் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப் புள்ளியை ஏற்க மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண் 532/2010/எம்.டி.2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண்.2 நாள்.16.4.2010</u>**

அலுவலகக்குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 3

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – தமிழ்நாடு அரசு மீன் வளத்துறை நவீன மீன் விற்பனை கூடம் - டாடாபாத் வடிவமைப்பு - கூடுதல் இடங்கள் ஒதுக்கீடு – தொடர்பாக.

- - - - - -

கோயம்புத்தூர் மாநகராட்சி, வடக்கு மண்டலம் டாடாபாத் பகுதியில் ஏற்கனவே மாமன்ற ஒப்புதல் பெற்று நவீன மீன் இறைச்சி கூடம் அமைக்க இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டு உத்திரவு வழங்கப்பட்டதன் அடிப்படையில் தமிழ்நாடு அரசு மீன் வளர்ச்சி துறையின் சார்பில் பொது மக்களுக்கு பயன்பட்டு வருகிறது. இதன் அடிப்படையில் மேலும் மூன்று இடங்களில் பொதுமக்கள் நலன் கருதி கூடுதலாக இடம் ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கோயம்புத்தூர் மாநகராட்சி கீழ்கண்ட பகுதி இடங்களை தேர்வு செய்து கூடுதலாக தமிழ்நாடு அரசு மீன் வளர்ச்சித்துறை நவீன மீன் விற்பனைக் கூடம் அமைக்கலாம்.

| வ. எண். | மண்டலம் | உத்தேச இடம் | பரப்பளவு | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1. | மேற்கு | காந்தி பார்க் | 20’x20’ | காந்திபார்க் பேருந்து நிலைய சந்திப்பு |
| 2. | கிழக்கு | சிங்காநல்லூர் பேருந்து நிலையம் (வட மேற்கு மூலை பகுதி) | 20’x20’ | சிங்காநல்லூர் பேருந்து நிலையம் (வட மேற்கு மூலை பகுதி) |
| 3. | தெற்கு | வ.உ.சி.பூங்கா - மீன் காட்சியகம் அருகில் | 20’x20’ | ஏற்கனவே உத்தேசம் நடவடிக்கையில் உள்ளது. |

மேற்காண் இடங்களில் பொதுமக்களின் நலன் கருதி தமிழ்நாடு அரசு மீன் வளர்ச்சித் துறையின் நவீன மீன் விற்பனை கூடத்திற்கு இட ஒதுக்கீடு செய்வது தொடர்பாக நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி குழுவின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டதில் நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக்குழு தனது தீர்மான எண்.81 நாள் 29.03.2010ல் மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது என தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண் 2166 /2010/எம்.எச்5

### மாநகர மன்ற தீர்மானம் எண்.3 நாள்.16.4.2010

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 4

பொருள்: கோவை மேட்டுப்பாளையம் ரோட்டில் உள்ள ஊனமுற்ற குழந்தைகள் நல சங்கத்தின் நிர்வாகிகள் மேற்படி சங்கத்திற்கு 2008-2009 மற்றும் 2009 - 2010ம் ஆண்டிற்கான நன்கொடை ரூ.5000/- வீதம் இரண்டு வருடங்களுக்கு ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) வழங்குமாறு கோருவது – தொடர்பாக.

அரசு ஆணை எண்.1066 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.10.12.1990-ல் மேற்படி சங்கத்தின் நன்கொடை கோரும் கடிதத்தின் பேரில் உரிய மன்ற அனுமதி பெற்று நன்கொடை வழங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே உடல் ஊனமுற்ற குழந்தைகள் நல சங்கத்திற்கு 2008-2009 மற்றும் 2009-2010-ம் ஆண்டிற்கான நன்கொடை ரூ.5000/- வீதம் இரண்டு வருடங்களுக்கு ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) மாநகராட்சி நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண். 4610 /2008/எம்.சி9

### மாநகர மன்ற தீர்மானம் எண்.4 நாள்.16.4.2010

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 5

கோயம்புத்தூர் மாநகரில் வரும் ஜீன் மாதம் 2010ல் நடைபெறவுள்ள உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாட்டிற்கு வருகை தரும் சர்வதேச தலைவர்கள், முக்கிய பிரமுகர்கள், மாநாட்டில் பங்கேற்போர் மற்றும் பொதுமக்கள் ஆகியோரின் பயன்பாட்டிற்கு தேவையான 60 எண்ணிக்கைகள் நவீன நடமாடும் கழிப்பறைகளை மாநாடு நடைபெறும் கொடிசியா வளாகம் மற்றும் மாநாட்டு ஊர்வலம் அமையும் முக்கிய சாலைகளில் அமைக்கும் பணிக்கு அரசாணை நிலை எண்:30 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள்:10-02-2010ல் ரூ.346.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாட்டிற்கான சிறப்பு அதிகாரி அவர்கள் கடந்த 25-02-2010 அன்று நடத்திய ஆய்வுக்கூட்டத்தில் மேற்படி 60 எண்ணிக்கைகள் நவீன நடமாடும் கழிப்பறைகளை நிறுவும் பணிகளை காலதாமதமின்றி செய்து முடிக்க சிப்பங்களாக பிரித்து வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தியதின் பேரில் சிப்பம்-1 ன் கீழ் மேற்படி மாநாட்டிற்கு வரும் சர்வதேச தலைவர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்களின் பயன்பாட்டிற்கென மாநாடு நடைபெறும் வளாகத்தில் 8 எண்ணிக்கைகள் நடமாடும் கழிப்பறைகளை வடிவமைத்தல், தயாரித்தல், விநியோகம் செய்தல் மற்றும் நிறுவுதல் பணிக்கு மதிப்பீடு ரூ.74,50,000/-க்கு மாமன்றம் தீர்மான எண் 243 நாள் 02.03.2010-ல் நிர்வாக அனுமதி வழங்கியதனைத் தொடர்ந்து மேற்கூறிய பணிக்கு கடந்த 25.03.2010 அன்று e-tendering முறையில் இரண்டு உறை முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அதன் விபரம் பின்வருமாறு:

1) திரு. வின்டோர்ஸ் இண்டர்நேஷனல் லிமிடெட், மும்பை.

2) திரு. ஸ்ரீ வெங்கடேஸ்வரா இன்ஜினியரிங் கார்பரேசன், கோயம்புத்தூர்.

மேலே குறிக்கப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில் நுட்ப தகுதிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வு குழுவினால் கடந்த 27.03.2010 அன்று திறனாய்வு செய்யப்பட்டதில் வரிசை எண் 1-ல் குறிக்கப்பட்டுள்ள நிறுவனம் ஒப்பந்தப்புள்ளி படிவத்தில் நிர்ணயிக்கப்பட்ட தொழில் நுட்ப தகுதி மற்றும் ஏனைய தகுதிகள் அனைத்தையும் பெற்றிருந்தனர். வரிசை எண் 2-ல் குறிக்கப்பட்டுள்ள நிறுவனம் ஒப்பந்தப்புள்ளி படிவத்தில் நிர்ணயிக்கப்பட்ட தொழில் நுட்ப தகுதி மற்றும் ஏனைய தகுதிகளை பூர்த்தி செய்யப்படவில்லை.

எனவே வரிசை எண் 1-ல் குறிக்கப்பட்டுள்ள நிறுவனம் கொடுத்திருந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று அவர்களது விலைப்புள்ளி அடங்கிய ஒப்பந்தப்புள்ளியினை திறக்கவும், வரிசை எண் 2-ல் குறிக்கப்பட்டுள்ள நிறுவனம் கொடுத்திருந்த ஒப்பந்தப்புள்ளியினை நிராகரிக்கவும் ஒப்பந்தப்புள்ளி திறனாய்வு குழுவினால் 30.03.2010 அன்று பரிந்துரை செய்யப்பட்டதனை ஏற்று ஆணையர் அனுமதி வழங்கியுள்ளார்.

அதனை தொடர்ந்து கடந்த 31.03.2010 அன்று திரு. வின்டோர்ஸ் இண்டர்நேஷனல் லிமிடெட், மும்பை நிறுவனத்தாரின் விலைப்புள்ளி அடங்கிய ஒப்பந்தப்புள்ளியினை திறக்கப்பட்டது. மேற்படி நிறுவனத்தார் மேற்கூறிய பணிக்கு ரூ.73,58,400/-க்கு ஒப்பந்தப்புள்ளியினை கொடுத்துள்ளனர். மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றத்தின் அனுமதி பெற சுகாதாரக் குழுவின் பரிந்துரை வேண்டி பொருள் வைக்கப்பட்டது. சுகாதாரக் குழு தனது தீர்மான எண்:105 நாள்:12-04-2010-ல் மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

எனவே சிப்பம்-1 ன் கீழ் மேற்படி மாநாட்டிற்கு வரும் சர்வதேச தலைவர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்களின் பயன்பாட்டிற்கென மாநாடு நடைபெறும் வளாகத்தில் 8 எண்ணிக்கைகள் நடமாடும் கழிப்பறைகளை வடிவமைத்தல், தயாரித்தல், விநியோகம் செய்தல் மற்றும் நிறுவுதல் பணிக்கு திரு. வின்டோர்ஸ் இண்டர்நேஷனல் லிமிடெட், மும்பை நிறுவனத்தார் கொடுத்துள்ள ரூ.73,58,400/-க்கான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்:2003/2010/எம்.டி.2

## மாநகர மன்ற தீர்மானம் எண்.5 நாள்.16.4.2010

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 6

கோயம்புத்தூர் மாநகரில் வரும் ஜீன் மாதம் 2010ல் நடைபெறவுள்ள உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாட்டிற்கு வருகை தரும் சர்வதேச தலைவர்கள், முக்கிய பிரமுகர்கள், மாநாட்டில் பங்கேற்போர் மற்றும் பொதுமக்கள் ஆகியோரின் பயன்பாட்டிற்கு தேவையான 60 எண்ணிக்கைகள் நவீன நடமாடும் கழிப்பறைகளை மாநாடு நடைபெறும் கொடிசியா வளாகம் மற்றும் மாநாட்டு ஊர்வலம் அமையும் முக்கிய சாலைகளில் அமைக்கும் பணிக்கு அரசாணை நிலை எண்:30 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள்:10-02-2010ல் ரூ.346.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாட்டிற்கான சிறப்பு அதிகாரி அவர்கள் கடந்த 25-02-2010 அன்று நடத்திய ஆய்வுக்கூட்டத்தில் மேற்படி 60 எண்ணிக்கைகள் நவீன நடமாடும் கழிப்பறைகளை நிறுவும் பணிகளை காலதாமதமின்றி செய்து முடிக்க சிப்பங்களாக பிரித்து வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தியதின் பேரில் சிப்பம்-2 ன் கீழ் மேற்படி மாநாட்டிற்கு வருகை தரும் பொதுமக்களின் பயன்பாட்டிற்கென மாநாடு நடைபெறும் வளாகத்தில் 10 எண்ணிக்கைகள் நடமாடும் கழிப்பறைகளை வடிவமைத்தல், தயாரித்தல், விநியோகம் செய்தல் மற்றும் நிறுவுதல் பணிக்கு மதிப்பீடு ரூ.63,66,000/-க்கு மாமன்றம் தீர்மான எண் 244 நாள் 02.03.2010-ல் நிர்வாக அனுமதி வழங்கியதனைத் தொடர்ந்து மேற்கூறிய பணிக்கு கடந்த 25.03.2010 அன்று e-tendering முறையில் இரண்டு உறை முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அதன் விபரம் பின்வருமாறு:

1) தி/ள். வின்டோர்ஸ் இண்டர்நேஷனல் லிமிடெட், மும்பை.
2) தி/ள். ஸ்ரீ வெங்கடேஸ்வரா இன்ஜினியரிங் கார்பரேசன், கோயம்புத்தூர்.

மேலே குறிக்கப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில் நுட்ப தகுதிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வு குழுவினால் கடந்த 27.03.2010 அன்று திறனாய்வு செய்யப்பட்டதில் வரிசை எண் 1-ல் குறிக்கப்பட்டுள்ள நிறுவனம் ஒப்பந்தப்புள்ளி படிவத்தில் நிர்ணயிக்கப்பட்ட தொழில் நுட்ப தகுதி மற்றும் ஏனைய தகுதிகள் அனைத்தையும் பெற்றிருந்தனர். வரிசை எண் 2-ல் குறிக்கப்பட்டுள்ள நிறுவனம் ஒப்பந்தப்புள்ளி படிவத்தில் நிர்ணயிக்கப்பட்ட தொழில் நுட்ப தகுதி மற்றும் ஏனைய தகுதிகளை பூர்த்தி செய்யப்படவில்லை.

எனவே வரிசை எண் 1-ல் குறிக்கப்பட்டுள்ள நிறுவனம் கொடுத்திருந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று அவர்களது விலைப்புள்ளி அடங்கிய ஒப்பந்தப்புள்ளியினை திறக்கவும், வரிசை எண்2-ல் குறிக்கப்பட்டுள்ள நிறுவனம் கொடுத்திருந்த ஒப்பந்தப்புள்ளியினை நிராகரிக்கவும் ஒப்பந்தப்புள்ளி திறனாய்வு குழுவினால் 30.03.2010 அன்று பரிந்துரை செய்யப்பட்டதனை ஏற்று ஆணையர் அனுமதி வழங்கியுள்ளார். அதனை தொடர்ந்து கடந்த 31.03.2010 அன்று தி/ள். வின்டோர்ஸ் இண்டர்நேஷனல் லிமிடெட், மும்பை நிறுவனத்தாரின் விலைப்புள்ளி அடங்கிய ஒப்பந்தப்புள்ளியினை திறக்கப்பட்டது. மேற்படி நிறுவனத்தார் மேற்கூறிய பணிக்கு ரூ.63,66,000/-க்கு ஒப்பந்தப்புள்ளியினை கொடுத்துள்ளனர்.

மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றத்தின் அனுமதி பெற சுகாதாரக் குழுவின் பரிந்துரை வேண்டி பொருள் வைக்கப்பட்டது. சுகாதாரக் குழு தனது தீர்மான எண்:106 நாள்:12-04-2010-ல் மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

எனவே சிப்பம்-2 ன் கீழ் மேற்படி மாநாட்டிற்கு வருகை தரும் பொதுமக்களின் பயன்பாட்டிற்கென மாநாடு நடைபெறும் வளாகத்தில் 10 எண்ணிக்கைகள் நடமாடும் கழிப்பறைகளை வடிவமைத்தல், தயாரித்தல், விநியோகம் செய்தல் மற்றும் நிறுவுதல் பணிக்கு தி/ள். வின்டோர்ஸ் இண்டர்நேஷனல் லிமிடெட், மும்பை நிறுவனத்தார் கொடுத்துள்ள ரூ.63,66,000/-க்கான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்:2004/2010/எம்.டி.2

## மாநகர மன்ற தீர்மானம் எண்.6 நாள்.16.4.2010

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 7

கோயம்புத்தூர் மாநகரில் வரும் ஜீன் மாதம் 2010ல் நடைபெறவுள்ள உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாட்டிற்கு வருகை தரும் சர்வதேச தலைவர்கள், முக்கிய பிரமுகர்கள், மாநாட்டில் பங்கேற்போர் மற்றும் பொதுமக்கள் ஆகியோரின் பயன்பாட்டிற்கு தேவையான 60 எண்ணிக்கைகள் நவீன நடமாடும் கழிப்பறைகளை மாநாடு நடைபெறும் கொடிசியா வளாகம் மற்றும் மாநாட்டு ஊர்வலம் அமையும் முக்கிய சாலைகளில் அமைக்கும் பணிக்கு அரசாணை நிலை எண்:30 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள்:10-02-2010ல் ரூ.346.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாட்டிற்கான சிறப்பு அதிகாரி அவர்கள் கடந்த 25-02-2010 அன்று நடத்திய ஆய்வுக்கூட்டத்தில் மேற்படி 60 எண்ணிக்கைகள் நவீன நடமாடும் கழிப்பறைகளை நிறுவும் பணிகளை காலதாமதமின்றி செய்து முடிக்க சிப்பங்களாக பிரித்து வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தியதின் பேரில் சிப்பம்-3 ன் கீழ் மேற்படி மாநாட்டிற்கு வருகை தரும் பொதுமக்களின் பயன்பாட்டிற்கென மாநாடு நடைபெறும் வளாகத்தில் 10 எண்ணிக்கைகள் நடமாடும் கழிப்பறைகளை வடிவமைத்தல், தயாரித்தல், விநியோகம் செய்தல் மற்றும் நிறுவுதல் பணிக்கு மதிப்பீடு ரூ.69,75,000/-க்கு மாமன்றம் தீர்மான எண் 245 நாள் 02.03.2010-ல் நிர்வாக அனுமதி வழங்கியதனைத் தொடர்ந்து மேற்கூறிய பணிக்கு கடந்த 25.03.2010 அன்று e-tendering முறையில் இரண்டு உறை முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அதன் விபரம் பின்வருமாறு:

1) தி/ள். வின்டோர்ஸ் இண்டர்நேஷனல் லிமிடெட், மும்பை.

2) தி/ள். ஸ்ரீ வெங்கடேஸ்வரா இன்ஜினியரிங் கார்பரேசன், கோயம்புத்தூர்.

மேலே குறிக்கப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில் நுட்ப தகுதிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வு குழுவினால் கடந்த 27.03.2010 அன்று திறனாய்வு செய்யப்பட்டதில் வரிசை எண் 1-ல் குறிக்கப்பட்டுள்ள நிறுவனம் ஒப்பந்தப்புள்ளி படிவத்தில் நிர்ணயிக்கப்பட்ட தொழில் நுட்ப தகுதி மற்றும் ஏனைய தகுதிகள் அனைத்தையும் பெற்றிருந்தனர். வரிசை எண் 2-ல் குறிக்கப்பட்டுள்ள நிறுவனம் ஒப்பந்தப்புள்ளி படிவத்தில் நிர்ணயிக்கப்பட்ட தொழில் நுட்ப தகுதி மற்றும் ஏனைய தகுதிகளை பூர்த்தி செய்யப்படவில்லை.

எனவே வரிசை எண் 1-ல் குறிக்கப்பட்டுள்ள நிறுவனம் கொடுத்திருந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று அவர்களது விலைப்புள்ளி அடங்கிய ஒப்பந்தப்புள்ளியினை திறக்கவும், வரிசை எண் 2-ல் குறிக்கப்பட்டுள்ள நிறுவனம் கொடுத்திருந்த ஒப்பந்தப்புள்ளியினை நிராகரிக்கவும் ஒப்பந்தப்புள்ளி திறனாய்வு குழுவினால் 30.03.2010 அன்று பரிந்துரை செய்யப்பட்டதனை ஏற்று ஆணையர் அனுமதி வழங்கியுள்ளார் . அதனை தொடர்ந்து கடந்த 31.03.2010 அன்று தி/ள். வின்டோர்ஸ் இண்டர்நேஷனல் லிமிடெட், மும்பை நிறுவனத்தாரின் விலைப்புள்ளி அடங்கிய ஒப்பந்தப்புள்ளியினை திறக்கப்பட்டது. மேற்படி நிறுவனத்தார் மேற்கூறிய பணிக்கு ரூ.63,56,000/- க்கு ஒப்பந்தப்புள்ளியினை கொடுத்துள்ளனர்.

மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றத்தின் அனுமதி பெற சுகாதாரக் குழுவின் பரிந்துரை வேண்டி பொருள் வைக்கப்பட்டது. சுகாதாரக் குழு தனது தீர்மான எண்:107 நாள்:12-04-2010-ல் மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

எனவே சிப்பம்-3 ன் கீழ் மேற்படி மாநாட்டிற்கு வருகை தரும் பொதுமக்களின் பயன்பாட்டிற்கென மாநாடு நடைபெறும் வளாகத்தில் 10 எண்ணிக்கைகள் நடமாடும் கழிப்பறைகளை வடிவமைத்தல், தயாரித்தல், விநியோகம் செய்தல் மற்றும் நிறுவுதல் பணிக்கு தி/ள். வின்டோர்ஸ் இண்டர்நேஷனல் லிமிடெட், மும்பை நிறுவனத்தார் கொடுத்துள்ள ரூ.63,56,000/-க்கான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்:2005/2010/எம்.டி.2

## மாநகர மன்ற தீர்மானம் எண்.7 நாள்.16.4.2010

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 8

கோயம்புத்தூர் மாநகரில் வரும் ஜீன் மாதம் 2010ல் நடைபெறவுள்ள உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாட்டிற்கு வருகை தரும் சர்வதேச தலைவர்கள், முக்கிய பிரமுகர்கள், மாநாட்டில் பங்கேற்போர் மற்றும் பொதுமக்கள் ஆகியோரின் பயன்பாட்டிற்கு தேவையான 60 எண்ணிக்கைகள் நவீன நடமாடும் கழிப்பறைகளை மாநாடு நடைபெறும் கொடிசியா வளாகம் மற்றும் மாநாட்டு ஊர்வலம் அமையும் முக்கிய சாலைகளில் அமைக்கும் பணிக்கு அரசாணை நிலை எண்:30 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள்:10-02-2010ல் ரூ.346.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாட்டிற்கான சிறப்பு அதிகாரி அவர்கள் கடந்த 25-02-2010 அன்று நடத்திய ஆய்வுக்கூட்டத்தில் மேற்படி 60 எண்ணிக்கைகள் நவீன நடமாடும் கழிப்பறைகளை நிறுவும் பணிகளை காலதாமதமின்றி செய்து முடிக்க சிப்பங்களாக பிரித்து வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தியதின் பேரில் சிப்பம்-4 ன் கீழ் மாநாட்டு ஊர்வலம் அமையும் முக்கிய சாலைகளில் 12 எண்ணிக்கைகள் நடமாடும் கழிப்பறைகளை வடிவமைத்தல், தயாரித்தல், விநியோகம் செய்தல் மற்றும் நிறுவுதல் பணிக்கு மதிப்பீடு ரூ.71,40,000/-க்கு மாமன்றம் தீர்மான எண் 246 நாள் 02.03.2010-ல் நிர்வாக அனுமதி வழங்கியதனைத் தொடர்ந்து மேற்கூறிய பணிக்கு கடந்த 25.03.2010 அன்று e-tendering முறையில் இரண்டு உறை முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அதன் விபரம் பின்வருமாறு:

1) தி/ள். வின்டோர்ஸ் இண்டர்நேஷனல் லிமிடெட், மும்பை.

2) தி/ள். ஸ்ரீ வெங்கடேஸ்வரா இன்ஜினியரிங் கார்பரேசன், கோயம்புத்தூர்.

மேலே குறிக்கப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில் நுட்ப தகுதிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வு குழுவினால் கடந்த 27.03.2010 அன்று திறனாய்வு செய்யப்பட்டதில் வரிசை எண் 1-ல் குறிக்கப்பட்டுள்ள நிறுவனம் ஒப்பந்தப்புள்ளி படிவத்தில் நிர்ணயிக்கப்பட்ட தொழில் நுட்ப தகுதி மற்றும் ஏனைய தகுதிகள் அனைத்தையும் பெற்றிருந்தனர். வரிசை எண் 2-ல் குறிக்கப்பட்டுள்ள நிறுவனம் ஒப்பந்தப்புள்ளி படிவத்தில் நிர்ணயிக்கப்பட்ட தொழில் நுட்ப தகுதி மற்றும் ஏனைய தகுதிகளை பூர்த்தி செய்யப்படவில்லை.

எனவே வரிசை எண் 1-ல் குறிக்கப்பட்டுள்ள நிறுவனம் கொடுத்திருந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று அவர்களது விலைப்புள்ளி அடங்கிய ஒப்பந்தப்புள்ளியினை திறக்கவும், வரிசை எண் 2-ல் குறிக்கப்பட்டுள்ள நிறுவனம் கொடுத்திருந்த ஒப்பந்தப்புள்ளியினை நிராகரிக்கவும் ஒப்பந்தப்புள்ளி திறனாய்வு குழுவினால் 30.03.2010 அன்று பரிந்துரை செய்யப்பட்டதனை ஏற்று ஆணையர் அனுமதி வழங்கியுள்ளார் . அதனை தொடர்ந்து கடந்த 31.03.2010 அன்று தி/ள். வின்டோர்ஸ் இண்டர்நேஷனல் லிமிடெட், மும்பை நிறுவனத்தாரின் விலைப்புள்ளி அடங்கிய ஒப்பந்தப்புள்ளியினை திறக்கப்பட்டது. மேற்படி நிறுவனத்தார் மேற்கூறிய பணிக்கு ரூ.65,85,600/- க்கு ஒப்பந்தப்புள்ளியினை கொடுத்துள்ளனர்.

மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றத்தின் அனுமதி பெற சுகாதாரக் குழுவின் பரிந்துரை வேண்டி பொருள் வைக்கப்பட்டது. சுகாதாரக் குழு தனது தீர்மான எண்:108 நாள்:12-04-2010-ல் மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

எனவே சிப்பம்-4 ன் கீழ் மாநாட்டு ஊர்வலம் அமையும் முக்கிய சாலைகளில் 12 எண்ணிக்கைகள் நடமாடும் கழிப்பறைகளை வடிவமைத்தல், தயாரித்தல், விநியோகம் செய்தல் மற்றும் நிறுவுதல் பணிக்கு தி/ள். வின்டோர்ஸ் இண்டர்நேஷனல் லிமிடெட், மும்பை நிறுவனத்தார் கொடுத்துள்ள ரூ.65,85,600/-க்கான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்:2006/2010/எம்.டி.2

## மாநகர மன்ற தீர்மானம் எண்.8 நாள்.16.4.2010

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 9**

கோயம்புத்தூர் மாநகரில் வரும் ஜீன் மாதம் 2010ல் நடைபெறவுள்ள உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாட்டிற்கு வருகை தரும் சர்வதேச தலைவர்கள், முக்கிய பிரமுகர்கள், மாநாட்டில் பங்கேற்போர் மற்றும் பொதுமக்கள் ஆகியோரின் பயன்பாட்டிற்கு தேவையான 60 எண்ணிக்கைகள் நவீன நடமாடும் கழிப்பறைகளை மாநாடு நடைபெறும் கொடிசியா வளாகம் மற்றும் மாநாட்டு ஊர்வலம் அமையும் முக்கிய சாலைகளில் அமைக்கும் பணிக்கு அரசாணை நிலை எண்:30 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள்:10-02-2010ல் ரூ.346.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாட்டிற்கான சிறப்பு அதிகாரி அவர்கள் கடந்த 25-02-2010 அன்று நடத்திய ஆய்வுக்கூட்டத்தில் மேற்படி 60 எண்ணிக்கைகள் நவீன நடமாடும் கழிப்பறைகளை நிறுவும் பணிகளை காலதாமதமின்றி செய்து முடிக்க சிப்பங்களாக பிரித்து வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தியதின் பேரில் சிப்பம்-5 ன் கீழ் மாநாடு நடைபெறும் வளாகம் மற்றும் மாநாட்டு ஊர்வலம் அமையும் முக்கிய சாலைகளில் மகளிர் பயன்பாட்டிற்கென 20 எண்ணிக்கைகள் நடமாடும் கழிப்பறைகளை வடிவமைத்தல், தயாரித்தல், விநியோகம் செய்தல் மற்றும் நிறுவுதல் பணிக்கு மதிப்பீடு ரூ.67,65,000/-க்கு மாமன்றம் தீர்மான எண் 247 நாள் 02.03.2010-ல் நிர்வாக அனுமதி வழங்கியதனைத் தொடர்ந்து மேற்கூறிய பணிக்கு கடந்த 25.03.2010 அன்று e-tendering முறையில் இரண்டு உறை முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அதன் விபரம் பின்வருமாறு:

1) தி/ள். வின்டோர்ஸ் இண்டர்நேஷனல் லிமிடெட், மும்பை.

2) தி/ள். ஸ்ரீ வெங்கடேஸ்வரா இன்ஜினியரிங் கார்பரேசன், கோயம்புத்தூர்.

மேலே குறிக்கப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில் நுட்ப தகுதிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வு குழுவினால் கடந்த 27.03.2010 அன்று திறனாய்வு செய்யப்பட்டதில் வரிசை எண் 1-ல் குறிக்கப்பட்டுள்ள நிறுவனம் ஒப்பந்தப்புள்ளி படிவத்தில் நிர்ணயிக்கப்பட்ட தொழில் நுட்ப தகுதி மற்றும் ஏனைய தகுதிகள் அனைத்தையும் பெற்றிருந்தனர். வரிசை எண் 2-ல் குறிக்கப்பட்டுள்ள நிறுவனம் ஒப்பந்தப்புள்ளி படிவத்தில் நிர்ணயிக்கப்பட்ட தொழில் நுட்ப தகுதி மற்றும் ஏனைய தகுதிகளை பூர்த்தி செய்யப்படவில்லை.

எனவே வரிசை எண் 1-ல் குறிக்கப்பட்டுள்ள நிறுவனம் கொடுத்திருந்த ஒப்பந்தப்புள்ளியினை எற்று அவர்களது விலைப்புள்ளி அடங்கிய ஒப்பந்தப்புள்ளியினை திறக்கவும், வரிசை எண் 2-ல் குறிக்கப்பட்டுள்ள நிறுவனம் கொடுத்திருந்த ஒப்பந்தப்புள்ளியினை நிராகரிக்கவும் ஒப்பந்தப்புள்ளி திறனாய்வு குழுவினால் 30.03.2010 அன்று பரிந்துரை செய்யப்பட்டதனை ஏற்று ஆணையர் அனுமதி வழங்கியுள்ளார் . அதனை தொடர்ந்து கடந்த 31.03.2010 அன்று தி/ள். வின்டோர்ஸ் இண்டர்நேஷனல் லிமிடெட், மும்பை நிறுவனத்தாரின் விலைப்புள்ளி அடங்கிய ஒப்பந்தப்புள்ளியினை திறக்கப்பட்டது. மேற்படி நிறுவனத்தார் மேற்கூறிய பணிக்கு ரூ.64,32,000/- க்கு ஒப்பந்தப்புள்ளியினை கொடுத்துள்ளனர். மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றத்தின் அனுமதி பெற சுகாதாரக் குழுவின் பரிந்துரை வேண்டி பொருள் வைக்கப்பட்டது. சுகாதாரக் குழு தனது தீர்மான எண்:109 நாள்:12-04-2010-ல் மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

எனவே சிப்பம்-5 ன் கீழ் மாநாடு நடைபெறும் வளாகம் மற்றும் மாநாட்டு ஊர்வலம் அமையும் முக்கிய சாலைகளில் மகளிர் பயன்பாட்டிற்கென 20 எண்ணிக்கைகள் நடமாடும் கழிப்பறைகளை வடிவமைத்தல், தயாரித்தல், விநியோகம் செய்தல் மற்றும் நிறுவுதல் பணிக்கு தி/ள். வின்டோர்ஸ் இண்டர்நேஷனல் லிமிடெட், மும்பை நிறுவனத்தார் கொடுத்துள்ள ரூ.64,32,000/-க்கான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்:2007/2010/எம்.டி.2

**மாநகர மன்ற தீர்மானம் எண்.9 நாள்.16.4.2010**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 10**

**பொருள் :** உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாடு - கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட சாலைகளில் தனியார் பங்களிப்பு மூலம் சாலை மைய தடுப்பு சுவர் கட்டி அலங்கார பூங்கா அமைத்து மூன்று ஆண்டுகளுக்கு விளம்பர உரிமத்துடன் கொடுத்து அவற்றினை பராமரித்து திரும்ப ஒப்படைத்தல் பணிக்கு விருப்ப கேட்பு அறிக்கை (EOI) கோரப்பட்டது – மாமன்றத்தின் அனுமதி வேண்டுதல் - தொடர்பாக.

**பார்வை :**
1. மாமன்ற தீர்மான எண் 283 நாள் 19-03-2010.
2. ஆணையர் அனுமதி நாள் 07-04-2010

-----------

பொருளில் கண்டுள்ள பணிக்கு கீழ்கண்ட பட்டியலில் கண்டுள்ளவாறு ஐந்து சிப்பங்களாக பிரித்து விருப்ப கேட்பு அறிக்கை (EOI) கடந்த 06-04-2010-ல் கோரப்பட்டது.

| சிப்பங்கள் | சாலையின் பெயர் | உத்தேச நீளம் (மீட்டரில்) |
|---|---|---|
| சிப்பம் - I | 1. ராஜேந்திர பிரசாத் சாலை மேற்கு பவர் ஹவுஸ் சாலை முதல் FCI சாலை வரை<br>2. ராஜு நாயுடு சாலை<br>3. அழகப்பா சாலை | 205.00<br>305.00<br>450.00 |
| சிப்பம் - II | 1. சின்னசாமி சாலை<br>2. ராமநாதபுரம் 80' அடி சாலை<br>3. ராமநாதபுரம் 50' அடி சாலை | 870.00<br>820.00<br>520.00 |
| சிப்பம் - III | 1. பாலசுந்தரம் சாலை, அவினாசி சாலை முதல் பாரதியார் சாலை வரை<br>2. காமராஜர் சாலை, அவினாசி சாலை முதல் திருச்சி சாலை வரை | 1160.00<br>1457.00 |
| சிப்பம் - IV | மசக்காளிபாளையம் சாலை டி.ஜே.நகர் முதல் சங்கனூர் லே அவுட் வரை | 450.00 |
| சிப்பம் - V | 1. திவான் பகதூர் சாலை கவுளி பிரவுன் சாலை முதல் சுக்கிரவார்பேட்டை சாலை வரை<br>2. திருவேங்கிடசாமி சாலை, தடாகம் சாலை முதல் மேட்டுப்பாளையம் சாலை வரை<br>3. கிருஷ்ணசாமி சாலை மேட்டுப்பாளையம் சாலை முதல் அவினாசி சாலை மேம்பாலம் வரை | 1750.00<br>1200.00<br>1350.00 |

மேற்படி பணிக்கு கீழ்கண்ட நிறுவனங்கள் கலந்து கொண்டு தங்களது விருப்பக் கேட்பறிக்கைகளை கொடுத்திருந்தனர்.

1. தி/ள் சசி அட்வர்டைசிங் (பி) லிட், கோவை.
2. தி/ள் வாண்டேஜ் அட்வர்டைசிங் (பி) லிட், சென்னை
3. தி/ள் ஏஸ். மீடியா அட்வர்டைசிங், கோவை
4. தி/ள் ஆர்.கே.மீடியா அட்வர்டைசிங், சென்னை
5. தி/ள் பப் வாட்ச், கோவை
6. தி/ள் முகில் மீடியா, திண்டுக்கல்.

மேலே குறிப்பிட்டுள்ள ஆறு நிறுவனங்களில் வரிசை எண்.6-ல் உள்ள நிறுவனம் தொழில் நுட்ப தகுதி மற்றும் விலைப்புள்ளி உறை ஆகியவற்றை ஒரே உறையில் வைத்து அளிக்கப்பட்டதால் மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்பட்டது.

வரிசை எண்.1 முதல் 5 வரை உள்ள நிறுவனங்களின் தகுதிகாண் கூறுகள் Eligibility Criteria) ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழுவினரால் பரிசீலனை செய்யப்பட்டதில், வரிசை எண்.1 முதல் 4 வரை உள்ள நிறுவனங்கள் தகுதியுடையவையாக தேர்வு செய்து ஆணையாளருக்கு பரிந்துரை செய்யப்பட்டதை ஆணையரின் ஒப்புதல் பெறப்பட்டது. இதனைத் தொடர்ந்து கடந்த 08-04-2010-ல் வரிசை எண் 1 முதல் 4 வரை உள்ள நிறுவனங்களின் விலைப்புள்ளிகள் அடங்கிய உறைகள் திறக்க ஆணையரின் உத்திரவு பெறப்பட்டது. வரிசை எண்.1 முதல் 4 வரை உள்ள நிறுவனங்கள் கொடுத்துள்ள விலைப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | நிறுவனங்களின் பெயர் | ஆண்டு குத்தகை தொகை (ரூபாயில்) (5 சிப்பங்களுக்கும் சேர்த்து) |
|---|---|---|
| 1. | திரு் சசி அட்வர்டைசிங் (பி) லிட், கோவை. | 32,00,034/- |
| 2. | திரு் வாண்டேஜ் அட்வர்டைசிங் (பி) லிட், சென்னை | 36,00,000/- |
| 3. | திரு் ஏஸ். மீடியா அட்வர்டைசிங், கோவை | 54,00,000/- |
| 4. | திரு் ஆர்.கே.மீடியா அட்வர்டைசிங், சென்னை | 57,79,008/- |

மேற்கண்ட நான்கு நிறுவனங்களில் ஒரு ஆண்டிற்கான உயர்ந்த பட்ச குத்தகை தொகையாக திரு் ஆர். கே. மீடியா அட்வர்டைசிங், சென்னை நிறுவனத்தார் ரூ 57,79,008/- கொடுத்துள்ளனர்.

எனவே, மேற்படி திரு் ஆர். கே. மீடியா அட்வர்டைசிங், சென்னை நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கவும், மேற்கண்ட சாலைகளில் மைய தடுப்புச் சுவர் கட்டி அலங்கார பூங்கா அமைத்துக் கொள்ளவும் தடுப்பு சுவர் மையப்பகுதியில் தமிழ்நாடு அரசு உள்ளாட்சிகளின் விளம்பரப் பலகைகள் உரிமம் சட்டம் (Tamil Nadu Urban Local Bodies Licensing of Hoardings and Levy and Collection of Advertisement Tax Rules Act-2003)-ல் தெரிவித்துள்ளவாறு மூன்று ஆண்டு காலத்திற்கு விளம்பரம் செய்து கொள்ளவும் மூன்று ஆண்டுகள் முடிவிற்கு பின்னர் மேற்படி நிறுவனத்தின் செயல்பாடுகள் திருப்திகரமாக இருப்பின் மேலும் மூன்றாண்டுகளுக்கு காலநீட்டிப்பு வழங்குவது குறித்து மாநகராட்சியால் பரிசீலனை செய்யப்படும் என்ற உத்திரவாதத்தின்பேரில் அனுமதி வழங்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் : 3001 /2010/எம்.டி.3

மாநகர மன்ற தீர்மானம் எண்.10 நாள்.16.4.2010

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

பொருள் எண்.11

பொருள். குத்தகை – கோவை மாநகராட்சி- கிழக்கு மண்டலம்-2010-2013-ம் ஆண்டுக்கான குத்தகை இனங்களில் ரேஸ்கோர்ஸ் கட்டண கழிப்பிடத்திற்கு "மின் ஏலம்" E-auction மூலம் ஏலம் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் உயர்ந்தபட்ச கேள்விதாரர்களுக்கு ஒப்படைவு செய்தல் - தொடர்பாக.

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட 2010-2013ம் ஆண்டுக்கான குத்தகை இனங்களில் ரேஸ்கோர்ஸ் கட்டண கழிப்பிடத்திற்கு 01.04.2010 முதல் 31.03.2013 முடிய காலத்திற்கு "மின் ஏலம்" E-auction முறையில் 06.04.2010 தேதியில் ஏலம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

| வ.எண் | ஏல இனங்கள் | சென்ற ஆண்டு ஏலத் தொகை 2009-2010 ரூ | மூன்றாண்டு சராசரி தொகை ரூ | நடப்பாண்டு ஏலத் தொகை ரூ | உயர்ந்த பட்ச ஏலதாரர் |
|---|---|---|---|---|---|
| 1. | ரேஸ்கோர்ஸ் ரோடு கட்டண கழிப்பிடம் | 35,083/- | 42,694/- | 54,000/- | அன்வர் |

மேற்காண் இனத்திற்கு சென்ற ஆண்டு ஏலத் தொகையை விட அதிகமாகவும், மூன்றாண்டு சராசரி தொகையை விட அதிகமாகவும் உள்ளது.

எனவே, மேற்காண் ஏல இனத்தினை தற்போது அலுவலக பணியாளர் மூலம் வசூல் பணி நடைபெற்று வருகிறது. நிர்வாக நலன் கருதியும், பணியாளர்கள் பற்றாகுறை காரணமாகவும், மேற்படி ஏல இனத்தின் உயர்நதபட்ச கேள்விதாரருக்கு ஒப்படைவு செய்வது தொடர்பாக வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் முன் அனுமதி பெற்றும், மாமன்றத்தின் அனுமதியுடன் உத்திரவு வழங்குவதற்கு மாமன்றத்தின அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண்.15525/ 09/ அ7

## <u>மாநகர மன்ற தீர்மானம் எண்.11 நாள்.16.4.2010</u>

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண்.12

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட 2010-2013 ஆம் குத்தகை இனமான தியாகி குமரன் மார்க்கெட் குத்தகையினத்திற்கு 04.03.2010ஆம் தேதியில் நடைபெற்ற பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் திரு.ஆர்.சுப்பிரமணியம் என்பவர் அளித்த உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.34,40,007/- ஆனது மூன்று வருடங்களுக்கென குறிப்பிட்டதாலும் தனக்கு மேற்படி தொகையினை மூன்று வருடங்களுக்கு என ஏற்று உரிமம் வழங்குமாறும் தவறும் பட்சத்தில் தாம் செலுத்தி உள்ள ஏலத் தொகையினை திரும்ப வழங்க கோரியதின் அடிப்படையில் ஏல நிபந்தனைகளின் படி மேற்படி ஏலதாரரின் ஏல வைப்புத் தொகைகளை பறிமுதல் செய்து மேற்படி இனத்திற்கு மறு ஏலம் கோருவதற்கு மாமன்ற தீர்மானம் எண்.299. நாள்.31.03.2010ல் ஒப்புதல் அளித்துள்ளது.

இதன் அடிப்படையில் மேற்படி இனத்திற்கு 06.04.2010 தேதியில் நடைபெற்ற மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கீழ்க் குறிப்பிட்டுள்ளவாறு உயர்ந்தபட்ச ஏலத் தொகை பெறப்பட்டுள்ளது.

| வ.எண் | இனம் | சென்ற ஆண்டுத் தொகை | மூன்றாண்டு சராசரித் தொகை | தற்போதைய உயர்ந்தபட்ச தொகை | ஏலதாரர் பெயர் |
|---|---|---|---|---|---|
| 1 | தியாகி குமரன் மார்க்கெட்டில் கடைகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 16,55,500/- | 21,00,000/- | 24,25,555/- | டி.பார்த்திபன் |

மேற்படி உயர்ந்தபட்ச ஏலத் தொகையினை ஏற்று வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தலைவர் மற்றும் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று உரிமம் ஒப்படை செய்யப்பட்டதற்கு மாமன்றத்தின் பின்னேற்புக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : பின்னேற்பு அளிக்கலாம் ந.க.எண்.9659/09/ அ1

## <u>மாநகர மன்ற தீர்மானம் எண்.12 நாள்.16.4.2010</u>

அலுவலகக்குறிப்பினை ஏற்று பின்னேற்பு வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண்.13**

**பொருள்-** கோவை மாநகராட்சி – மேற்கு மண்டலம் - குத்தகை இனங்கள் 2010-13 மூன்றாண்டுகளுக்கு ஒப்படைத்தல் - பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 24.03.2010, பொது மறு மின் ஏலம் மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளி 29.03.2010 மற்றும் 06.04.2010 ஆகிய தேதிகளில் நடைபெற்றது – ஏலக் கேள்வி மற்றும் ஒப்பந்தப்புள்ளி தொகை பெறப்பட்டது தொடர்பாக மன்றத்தின் பின்னேற்புக்கு சமர்ப்பிக்கப்பட்டது குறித்து.

----

கோவை மாநகராட்சி, மேற்கு மண்டலம், குத்தகை இனங்கள் 2010-13 மூன்றாண்டுகளுக்கு ஒப்படைத்தல் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி திவான் பகதூர் ரோடு மாநகராட்சி பள்ளி வளாகத்தில் உள்ள வாகனம் நிறுத்துமிடத்தில் உள்ள கட்டணம் வசூலிக்கும் உரிமை இனத்திற்கான பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 24.03.2010-ம் தேதியில் நடைபெற்றதில் உயர்ந்தபட்ச மின் ஏலக் கேள்வித்தொகை ரூ.18,66,000/-ற்கு திரு.எம்.அருண்சங்கர் என்பவர் கோரியிருந்தார். உயர்ந்தபட்ச ஏலத்தொகையில் 5 சதவீதம் உயர்த்தி ஏலக் கேள்வித் தொகை நிர்ணயம் செய்து திரு.ஏ.எம்.நாசர் அலி என்பவர் ரூ.19,59,300-ற்கு வங்கி வரைவோலை வழங்கி மேற்படி இனத்தை பொதுமறு ஏலத்திற்கு கொண்டு வர விண்ணப்பத்திருந்தார். அதன்படி மேற்படி இனத்தை பொது மறு ஏலத்திற்கு 29.03.2010 அன்று கொண்டுவரப்பட்டது.

29.10.2010-ம் தேதிய பொது மின் மறு ஏலத்தில் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.22,33,322/-க்கு திரு.எம்.சரவணக்குமார் என்பவர் கோரியிருந்தார். இத்தொகையுடன் 5 சதவீதம் உயர்த்தி ஏலக் கேள்வித் தொகை நிர்ணயம் செய்து திரு.எஸ்.அனந்தராமகிருஷ்ணன் என்பவர் ரூ.23,44,988/-க்கு வங்கி வரைவோலை வழங்கி மேற்படி இனத்தை பொது மறு ஏலத்திற்கு கொண்டுவர விண்ணப்பித்திருந்தார். அதன்படி மேற்படி இனத்தை பொது மறு ஏலத்திற்கு 06.04.2010-ம் தேதியன்று பொது மறு ஏலத்திற்கு கொண்டுவரப்பட்டது. மற்றும் மேற்படி இனத்தை அரசு ஆணை எண்.78 நாள்.25.05.2009-ன்படி மூன்றாண்டுகளுக்கு நீட்டிப்பு செய்து தரக் கோரி திரு.பி.வி.சுப்பிரமணியன் என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் இடைக்கால தடை உத்திரவு பெற்றிருந்தார். சென்னை உயர்நீதிமன்ற உத்திரவு எண்.W.P.No.5109/10 எண்ணிட்ட.12.03.2010-ம் தேதிய உத்திரவில் 2 மாதங்களில் மேற்படியாருக்கு தக்க பதில் அளிக்க தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதன்படி மேற்படியாரைப் போன்றே 3 வருட குத்தகை காலத்தை நீட்டிப்பு செய்து தரக்கோரி குத்தகைதாரர்களால் W.P.No.1337/10 உள்ளிட்ட வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. சென்னை உயர்நீதி மன்றத்தில் நீண்ட விசாரணைக்கு பின்பு மேற்படி அரசு ஆணையின்படி திரு.பி.வி.சுப்பிரமணியத்தைப் போன்ற குத்தகைதாரர்கள் மூன்று வருட குத்தகை கால நீட்டிப்பு கேட்க இயலாது என 15.03.2010 அன்று தீர்ப்புகள் வழங்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படியாருக்கு மூன்று வருட காலத்திற்கு குத்தகை நீட்டிப்பு செய்து தர இயலாது என05.04.2010 அன்று பதில் அளிக்கப்பட்டுள்ளது.

எனவே, 06.04.2010-ம் தேதிய பொது மின் மறு ஏலத்தில் உயர்ந்தபட்ச ஒப்பந்தபுள்ளி தொகை ரூ.28,00,800/-க்கு திரு.எஸ்.அனந்தராமகிருஷ்ணன் என்பவர் கோரியுள்ளார். இத்தொகை 2009-10 ஆண்டின் ஏலத்தொகை ரூ.11,04,114/-ஐ விட அதிகமாக உள்ளது. மேலும் மூன்றாண்டு சராசரி தொகையாக நிர்ணயிக்கப்பட்ட தொகை ரூ.13,23,927 /-ஐ விட உயர்வாக உள்ளது.

எனவே மேற்படி இனத்திற்கு 01.04.2010 முதல் நிர்வாக ரீதியாக துறைவாரியான வசூல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வலுவலக பணியாளர்களது பற்றாக்குறையை முன்னிட்டும் மற்றும் வருவாய் நிதியிழப்பை தவிர்க்கும் பொருட்டும் மேற்படி இனத்தை உயர்ந்தபட்ச ஒப்பந்தபுள்ளிதாரரான திரு.எஸ்.அனந்தராமகிருஷ்ணன் என்பவருக்கு ஒப்படைக்க அவசர அவசியத்தை முன்னிட்டு வரி விதிப்பு மற்றும் நிதிக்குழுவின் முன் அனுமதியையும் பெற்றும் மற்றும் மாமன்றத்தின் முன் அனுமதியை பெற்றும் மேற்படி இனத்தை சம்பந்தப்பட்ட உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளிதாரருக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டதற்கு மாமன்றத்தின் பின்னேற்பிற்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண்.12496/ 08/ அ1 (மே)

**மாநகர மன்ற தீர்மானம் எண்.13 நாள்.16.4.2010**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

(ஒப்பம்) ஆர்.வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி